முருகப்பெருமான் துணை

# மகான் சகாதேவன் அருளிய அறிவுரை ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.12.2023**, செவ்வாய்கிழமை

1. அருள் ஞான பலம் கொண்ட
ஆறுமுக அரங்க ஞானியே
தருமத்தின் மகா சக்தியாக
தரணியில் அவதரித்த ஞானியே
2. ஞானியே உன்பெருமை கூறி
ஞாலமதில் சோபகிருது தேள்திங்கள்
இனிமைபட மூவாறோர் திகதி குசன்வாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 19 ம் நாள், 05.12.2023, செவ்வாய்கிழமை)
இயம்பிடுவேன் சகாதேவன் யானும்
3. யானுமே அறிவுரை ஆசிதனை
உலகநலம் காண உரைப்பேன்
ஞான தேசிகன் தருமத்தால்
நவக்கோட்களும் ஆசி தந்தருள
4. அருள்மிக்க மகா சக்திகளும்
ஆற்றலாய் அரங்கன் சேவைக்கு
வரம்பல தந்து உடனிருக்க
வையகத்தில் கரும வினைவெல்ல
5. வெல்ல உகந்த சிறந்த சபை
வேலவன் ஆட்கொண்ட நல்
வல்லமை மிக்க பிரணவக்குடிலே
வணங்கி உலகமக்கள் வந்தால்
6. வந்திட கிரக தோட இன்னலோடு
வஞ்சம் சூழ்ச்சி ஏவல் ஓமல்
சிந்தை அழிக்கும் தீவினை யாவும்
செய்வதறியா விலகி நின்றுமே

7. நின்றுமே வருவோர்க்கு ஞானபலம்
நிம்மதி காரிய வெற்றியென
நன்றான பலன்களாகச் சிறந்து
ஞானவழி அகலா சிறப்பர் என்பேன்

8. என்கவே அரங்க மகானும்
ஏழாம்படை வீட்டில் ஆற்றலை
சண்முகனார் சரவணசோதியாக
சகலருக்கும் ஞான ஒளி தந்து

9. தந்துமே மகாமந்திர தீட்சை
தக்கபடி மேல்நிலை பெற
சிந்தைபலம் காண அருளிவர
சிறப்பான வழிகள் தனை ஏற்று

10. ஏற்றுமே ஞானம் பயில
எல்லாம் குருவருளே என
பற்றுவைத்து சரணாகதிகொண்டு
பணிந்து அன்னதான பலமும்

11. பலமும்பெற தருமவழி உதவிவர
பாருலகில் ஞானவான்களாகி
உலகமெங்கிலும் அரங்கன் படை
உயிர்காக்கும் உலகைமீட்கும் சக்திகளாக மாறும்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–